ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

सनत्सुजात उवाच—

अमृत्युः कर्मणा केचिन्मृत्युर्नास्तीति चापरे।
शृणु मे ब्रुवतो राजन्यथैतन्मा विशङ्किथाः ॥
उभे सत्ये क्षत्रियाद्य प्रवृत्ते मोहो मृत्युस्सम्मतो यःकवीनां ।
प्रमादं वै मृत्युमहं ब्रवीमि तथाऽप्रमादममृतत्वं ब्रवीमि ॥

ஓ! திருதராஷ்டிர மஹாராஜனே! சிலர் கர்மாவினால் மிருத்தியுவின் நிவிருத்தியைச் சொல்லுகின்றனர். மற்றுஞ் சிலர், மிருத்தியுவென்பது ஒன்று இல்லையென்கின்றனர். இதெவ்விதமென்பதை நான் நிரூபிக்கிறேன். கேட்பாயாக, ஜயமுறாதே ஓ? அரசனே? அனாதியான "மிருத்தியுண்டு, இல்லை" என்ற இவ்விருபக்ஷமும், உண்மையானதே, ஆனால், சில தர்சனக்காரர்கள் அனாத்ம வஸ்துவில் ஆத்மபுத்தியைச் செலுத்துவதாகிய பிராந்திக்ஞானத்தை, மிருத்தியுவென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். நானோவெனின், (ஆத்மஸ்வரூபத்திலிருந்து) தவிர்தலே, மிருத்தியுவாகுமென்றும் (ஆத்மஸ்வரூபத்திலிருந்து) தவறாமையை மோக்ஷமென்றும் சொல்லுகிறேன்.

நாம் ஜீவித்திருக்கும்போதே, ஜன்மம், மரணம் இவ்விரண்டையும் தாண்டவேண்டுமென்பது நமது சாஸ்திரங்களின் அபிப்பிராயம். சிலர், ச்ரௌதஸ்மார்த்தாதி கர்மாக்களால் அதன்நிவிருத்தியைக்கோருகிறார்கள். மற்றுஞ் சிலர் ஞானகர்மாக்களிரண்டினாலும், மற்றுஞ்சிலர், கேவல ஞானத்தாலும், அதனை நிவிருத்திக்க முயல்கின்றார்கள். இவற்றுள் கேவல ஞானபக்ஷந்தான் ஸனத்ஸுஜாத பகவானுடையது. பிரமாதம், என்றால், மூலாக்ஞானமென்று பொருள். அப்பிரமாதமென்றால், ஞானமென்று அர்த்தம், அவ்வஞ்ஞானமே புருஷர்களுக்கு மோஹகாரணமாதலால் அவ்வஞ்ஞான காரியமாயுள்ள பிராந்தி ஞானத்தை மிருத்தியுவென்று சொல்வதைக்காட்டிலும், அவ்வஞ்ஞானத்தையே, மிருத்தியுவென்பதுதான் உத்தமம். எப்போது, ஆத்மதத்துவஞ்ஞானம், உதிக்குமோ? அப்போது தான் அவ்வஞ்ஞானமும், அதன் காரியமாகிய ஸர்வப்பிராந்தியும், நிச்சேஷமாய் நசித்துவிடும். இதனால் இவ்வஞ்ஞானமாகிய மிருத்தியு ஸத்தியமாயின், ஞானத்தால் நிவிருத்தியாகாது. ஞானாக்கினியால் அஞ்ஞானம் பஸ்மமாவதற்கு அனாதிவாஸனை அடிக்கடித் தடையாய் வரும். லோகவாஸனை, தேஹவாஸனை, சாஸ்திரவாஸனைகளால், உதித்த ஆத்மஞானமும் திடப்படாமல் போகும். அவைகளை ஸந்ததம் ஆத்மஞானாப்யாஸ பலத்தால் அப்போதே அடக்கவேண்டும். இவ்வாத்மநிஷ்டையினின்று எக்காலத்தும் தவறக்கூடாது. சுபம.

V. J. S

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஹு ஆவணி-மீ ௫௨

புராதன வித்யாபிவிருத்தி.

4—8—32௳ சென்னை ஸர்வகலாசாலை மண்டபத்தில், கௌரவப்பட்டம் பெறுவதற்காக வந்த மாணவர்களை நோக்கி, கல்வி மந்திரி ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியார் அரியதோர்ப்பிரஸங்கம் செய்தார். அந்தப் பிரஸங்கத்தில், தற்கால வித்யாப்யாஸ முறையிலுள்ள கெடுதல்களையும், தற்கால வித்யாப்யாஸத்தின் உத்தேசத்தையும், அதன் கெடுதல்களை எவ்விதம் நிவிருத்தி செய்யலாம் என்பதையும், அவர் தெளிவாகவும், விஸ்தாரமாகவும், எடுத்துக்காட்டியிருக்கிறார். அப் பிரஸங்கமானது, உத்யோகப்பற்றுள்ள மாணவர்களுக்கு உத்யோக விஷயத்தில் நம்பிக்கையையும் பின் என்னசெய்வதென்பதில் அதிக சிந்தனையும் அளிக்கக்கூடியதாயிருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. மற்றுமுள்ள உத்யோக ஆசைகொண்ட பட்டதாரிகளுக்குங்கூட இவருடையப் பிரஸங்கமானது, கவலையைத் தூண்டிவிடுமென்பதிலும் ஐயமில்லை. கல்வி இலாகா விஷயமான அதிகாரத்தை வகித்துவரும் அன்னாருடைய அனுபவமும், அர்த்த புஷ்டியும்நிறைந்த பிரஸங்கத்தில் வியசனிக்கத்தக்க விஷயம் யாதொன்றுமில்லைஎன்று எனது அபிப்பிராயம்.

வித்யையானது, கேவலம். உத்யோகம் பெறுவதற்காக மாத்திரம் ஸாதனமென்று நினைக்கக்கூடாதென்றும், பிற்கால வாழ்க்கையில் உபயோகப்படக்கூடிய கல்வியே தற்காலம் நம்மவருக்கு முக்கியமென்றும், மேனாட்டினர், கல்வியைக்கொண்டு, கைத்தொழில் செய்வதில் விசேஷ முன்னேற்றமடைந்துவிட்டனர் என்றும், ஜன ஸமூகத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படி, நமது கல்விமுறையைத் திருத்தவேண்டுமென்றும், படிப்புக்குப் பரீட்சையில் பட்டம் பெறுவதே பிரதான லக்ஷ்யமென்று எண்ணுவது தவறென்றும் கனம் மந்திரி சொல்லியிருக்கிறார். இது பிசகு என்று யாராவது சொல்லமுடியுமா? மேனாட்டுக்

கல்விக்கு உபயோகம்பெற்று, மேனாட்டினர்களுக்கு அடிமையாயிருப்பதைத்தவிற வேறு என்னப் பிரயோஜனமிருக்கின்றது? மாணுக்கர்களுக்கு ஆத்மோந்நதி, சாந்தி, சௌக்கியம் முதலிய நற்குணங்களுக்குறிய கல்விமுறையை விளக்கிக் காட்டினால், உத்தமமாயிருக்கும். தற்கால மேனாட்டுக்கல்வியைக் கற்பதினால், கேவலம் உத்யோக மோஹமும், பணவுணர்ச்சியுந்தான் விருத்தியாகும். நம்மிடம், தரித்திரம், கஷ்டம், இவை நிறைந்திருப்பதற்கு இதுதான் காரணம்.

ஆதிகாலத்தில், எல்லோரும் உத்யோகம் வேண்டும், உத்யோகம் வேண்டும், என்று சொல்லிவந்தார்கள். பிறகு, உக்யோகங்களை ராஜீநாமாச் செய்யவேண்டுமென்ற புதியகிளர்ச்சி நாடெங்கும் பறவிற்று. எல்லோருமொன்றையே நாடிச்செல்வது தான் பெருங்கஷ்டந்தரும். தற்காலம் நெசவுத்தொழிலில் யாவருமிறங்கிவிட்டால் ஸ்வாராஜ்யம் குதித்துவிடுமென்ற கிளர்ச்சி செய்யப்படுகின்றது. ஒரேதொழில் நாடெங்கும் பரவுவதால், மற்ற கைத்தொழில்களெல்லாம் பலஹீநம்பெற்று மங்கிப்போகுமன்றோ? எல்லாத் தொழில்களும் ஸமமாக நமக்கு வேண்டியவைதான் என்பதை எவரும் மறந்துவிடலாகாதல்லவா? சர்க்கார் உத்யோகத்தைத்தவிற வேறு சௌகரியமான ஸம்பாதன மார்க்கங் கிடையாதென்று சொல்வதும் அவ்வளவு உசிதமாய்த் தோன்றவில்லை. இதுவரையில், நம் நாட்டிலுள்ளவரனைவரும் உத்யோகத்தாலேயே ஜீவனம்செய்து வந்தார்களென்று சொல்ல முடியுமா? உத்யோகங்கிடைக்குமென்றுதான் இங்கே நாம் ஜனனமெடுத்திருக்கிறோமா? நம்மவரின் ஸ்வபாவம் எதையுமாய்ந் தோய்ந்துப் பார்த்துச்செய்வதில்லை. அர்த்தத்தில் பேராசை ஏற்பட்டால், குணதோஷம் கொஞ்சமும் புலப்படமாட்டாது.

गतानुगतिको लोको न लोकः पारमर्थिकः ।

என்ற நியாயப்படி ரப்பர் பயிர்செய்தால் நல்லபணம் கிடைக்கும்'' என்றால் எல்லோரும் ரப்பர்தோட்டம் போட ஆரம்பிப்பார்கள். பருத்திக்குத் தற்காலம் விலையதிகம் என்றால் எல்லோரையும் பருத்தித்தோட்டத்தில் காணலாம். அதுபோல்தான் அதிகாரப் பதவியை ஆசைப்படுவதும் நமக்குச் சுவபாவமாகிவிட்டது. இந்த அதிகாரமோஹத்திற்கும் மேனாட்டு கல்விமுறையில் மோஹம்

தான் காரணம். அதற்கும் மேனுட்டு நாகரீகத்தில் மோஹந்தான் காரணமாகும்.

தவிர, உத்யோகத்திற்கு அவரவர் அதிருஷ்டம் காரணமேயன்றி பட்டம்பெருதலும், நமது முயற்சியும் காரணமில்லையென்பது யாவருமறிந்தவிஷயம். அரசாங்கம் உத்தியோக மோஹங்கொண்டு கலாசாலைகளில் யாவரும் படித்துப் பட்டம்பெறவேண்டுமென்று வற்புறுத்தவில்லையே? நமக்குத்தான் "ஆங்கிலம் கற்ருல் பெரிய உத்யோகங்கிடைக்கும்" என்ற மனோரதம். அதை நாம்தான் போகும்படி செய்துகொள்ளவேண்டுமேயொழிய கலாசாலைகளிடத்திலும், அதன் அதிபர்களிடத்திலும், அரசாங்கத்தினிடத்திலும், அதன் நிவிருத்தி உபாயத்தை எதிர்பார்ப்பது ஏளனத்துக்கு இடமாமன்றோ? உத்யோகத்தால் நம் நாட்டு ஜனங்களெல்லோரும் ஜீவனம் செய்துவிடமுடியுமா? அப்படியானல் ஜீவனேபாயமின்றியே பல பட்டதாரிகளும் கஷ்டப்படுவதற்கு என்னகாரணம்? பட்டம்பெற்ருல் உத்தியோகம் நிச்சயமாயுண்டென்று சட்டமில்லையே. உத்யோகம் முதலிய பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராமல்தான் முதலில்பட்டம்பெறவேண்டும். பிறகு உத்யோகங்கிடைப்பது நிச்சயமில்லை என்ற இந்த சம்சயப் பட்ட வாழ்வு நம்மவருக்கேன்? இவ் வுலகில் சிலர்மாத்திரம் சுகமாக வாழ்வது, மற்றவர் எல்லோருந்துக்கப்பட்டுக்கொண்டு வாழவேண்டுமென்பது உசிதமா? எல்லோரும் க்ஷேமமாய் வாழும் முறையையல்லவா நாம் நாடவேண்டும். எல்லோரும் சுகமாக வாழும் முறை தற்காலத்திய கல்வியால் கிடைக்குமா? என்று ஒவ்வொருவரும் ஆலோசிக்கவேண்டும்.

தற்காலத்திய கல்விமுறையால் நமது மதம், ஞானம், யோகம், சன்மார்க்கம் முதலிய விஷயங்கள் மாணவர்களுக்கேற்படக்கூடுமா? நமது மனச் சக்திகளைப் பெருக்காத கல்வி என்ன கல்வி? நம்மை இதுவரையில் ஸ்திரீகளைப்போல் பிற நாட்டினருக்கு அடிமையாக்கிவிட்டிருப்பதும் இக்கல்வியின்பயனே.

மேனுட்டுக் கல்விமுறை வெகு நாளாய்க் கையாளப் பட்டுவந்ததால்தான் நாம்மவரில் ஆஸ்திகர் ஒருவராவது கிடைப்பதரிதாயிற்று. அப்படி யாராவது ஒன்றிரண்டுபேர் காணப்பட்டால் அதுவும் அப் படிப்பினலேற்பட்டதில்லை. வேறிடத்தில்

தாய்பாஷையைக் கற்றுக்கொண்டதனால்தான் அவ்விதம் ஆஸ்திக்யமேற்பட்டது. ஆதலால் நமது வாழ்நாளை ஸன்மார்க்கத்தில் திருத்துவதற்கு இப் பாஷை ஸரியானபாஷையல்ல என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆகவே ஆங்கில பாஷையையோ, அதைக் கற்கின்ற மாணவர்களையோ நான் இழிவுபடுத்திக் கூற முன்வரவில்லை. எந்தபாஷையாயிருந்தாலும் நல்வழியில் அதை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதுதான் நமது அபிப்பிராயம். நல்லமுறையில் எதையும் உபயோகித்தால் எல்லாம் நல்லதாகவே முடியும். மேனாட்டினருடைய நற்குணங்களையும், யந்திர வேலைகளையும் இன்னும் பல்வேறு விஷயங்களையும் கற்றுக்கொள்வதில் ஆக்ஷேபமில்லை. நாமும் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய பாகம் ஒன்று உண்டு. ஆகவே ஸ்ரீமான் செட்டியாருக்கு புராதனக் கல்வி அபிவிருத்தியில் அதிகநோக்கமிருப்பதானது போற்றத்தக்கதே.

ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் உத்தியோகம் கிடைக்காத பட்டதாரிகள் கிராம புனருத்தாரண கைங்கர்யம் செய்துவர வேண்டுமென்று சொல்லியிருப்பதும் ஆமோதிக்கத் தக்கதே. கிராமபுனருத்தாரணவேலையைப் பட்டதாரிகளுக்கு ஒருவர்பயிர்ச்சி செய்விக்கவேண்டியதென்பதில்லை. பட்டம் பெறுவதிலிவர்களுக்கிருந்த புத்தி சக்தியை கிராம ஊழியத்திலும் தாமே உபயோகித்துக்கொள்ள இடமுண்டு. இவர்கள் கிராமங்களுக்குப்போய் என்ன செய்யவேண்டுமென்பதையும் விஸ்தாரமாய் கனம் மந்திரி அறிவித்திருக்கிறார். பட்டதார்களுக்கு இந்த கிராமவாழ்வு பிடிக்காமல்போனால் பட்டணத்தில் வேறு என்ன ஜீவனோபாயம் ஏற்படக்கூடியதாயிருக்கிறது. எங்கும் வேலை இல்லாத திண்டாட்டம் திண்டாட்டமே. கிராமத்திலாவது விவஸாயம் நீர்பாசன வஸதிகளை கவனித்தல், கோயில் குளம் முதலியவற்றை சரியானபடிப் பாதுகாத்தல். குடிகளுக்குள் சண்டை சச்சரவுகளை விலக்கல், தானும் தமது முன்னோர்களின் ஆசார அநுஷ்டான முறைகளை நழுவவிடாமல் கூடியமட்டும் செய்துவருதல், இவை முதலிய கார்யங்கள் உண்டு. சாப்பாட்டிற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு இவர்கள் பட்டணத்தில் வஸிப்பதினால் என்ன பயன்? ஆதலால் புனிதமான நமது புராதன வித்தையை முன்னுக்குக் கொண்டு வருவதுதான் உசிதம். மேனாட்டுக்கல்வி மயக்கத்தினால் கீழ்

நாட்டுக்கல்வியை இழந்தது தவறென்பதை ஒப்புக்கொள்ளாமல் இருப்பதும் தவறு. ஆகையால் ஆஸ்திகர்களே கனம் மந்திரியின் அபிப்பிராயம் நமது புராதன வித்யாப்பியாஸ முறையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதே. இவ்வித அபிப்பிராயத்தை, சில பத்திரிகைகள் கொஞ்சம் குறைவுபடுத்தி கூறியிருக்கின்றன. அப்பத்திரிகைகளிலெடுத்துக்காட்டிய குறைகளுக்கெல்லாம் அவர் மட்டிலும் பாத்யஸ்தர் இல்லை என்ற அம்சத்தை இதன் மூலமாய் நான் தெரிவித்துக்கொண்டேன். புராதன வித்யாப்யாஸ முறையின் அபிவிருத்தியில் உண்மை ஊக்கங்கொண்ட கனம் மந்திரிக்கு ஸர்வேச்வரன் ஸர்வச்ரேயஸ்ஸையும், உத்தரோத்தம ஸத் புத்தியையும், அநுக்ரஹிக்கவேண்டுமென ஆஸ்திகர்களின் ஆசீர்வாதம்.

சுபம். V ஜகதீச்வர சாஸ்திரிகள்,

திருவானைக்காவல் க்ஷேத்திர மாஹாத்மியம், அரங்கேற்றுப்படி ஸபா.

இந்த ஸபையானது, திருவானைக்காவல் வாஸிகளான அசேஷமகாஜனங்களால் தங்களுக்குப் பிரதிநிதியாக ஏற்படுத்தப் பட்டவர்களால் பிரஸித்திசெய்யப்பட்ட பத்திரிகையில் கண்டபடி சென்ற ஆடி-மீ 22உ (6—8—32) சனிக்கிழமையன்று ஸ்ரீஅகிலாண்டேசுவரியம்பாள் ஸந்நிதியில் நடைபெற்றது. அந்த ஸமயம் ஸ்ரீரங்கம், திருச்சி, கொண்டையம்பேட்டை முதலிய விடங்களிலிருந்தும் உள்ளூரிலுமாகசுமார் 300ஜனங்கள்வரையில் ஸபையை அலங்கரித்தார்கள். அச்சமயம் ஸபையோர்களின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீரங்கம் பிர்ம்மஸ்ரீ டி. கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் அக்ராஸனாதிபதி பதவியை ஏற்பதற்கு ஸ்ரீலோக மாதாவாய் விளங்கும் ஸ்ரீ அகிலாண்டேசுவரிக்குத்தான் அருகதை. அந்த ஸந்நிதியில் பின்னொருவர் தகுதியுள்ளவராகார். ஆனாலும் மித்ரர்களான ஸபையோர்களுடைய அபிப்பிராயத்தை மாற்றுவது உசிதமில்லை என்றுமாத்திரம் நானும் அங்கீகரிக்கிறேன் என்று ஏற்றுக்கொண்டார்கள். இந்த ஸபைக்கும் ஸ்ரீ அம்பாளுக்கும் எதிர்முகமாக ஷெ க்ஷேத்திர மாஹாத்மியத்தில்

50 புஸ்தகங்களை நன்றாய் ஒரு மேஜையில் அடுக்கி அதற்கு இரு பக்கங்களிலும் சிறந்த தீபங்களால் அலங்கரித்து அந்த புஸ்தகங்களில் உயர்ந்த ரோஜா ஜாதி முதலிய புஷ்பமாலைகளைச் சாற்றி தர்சிக்கும் ஜனங்கள் ஸ்ரீஜம்புநாதரே இங்கு ஸபைக்கு விஜயம் செய்திருக்கிறாரோவென்று கருதும்படி நன்றாய் அமைக்கப்பட்டிருந்தது. பிறகு அந்த க்ஷேத்திர மாஹாத்மியத்தை வடமொழியிலிருந்து தென்மொழியில் மொழிபெயர்த்த ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீபஞ்சாபகேச சாஸ்திரியள் முந்தி தாம் இந்தப்புண்யமான சிவ கைங்கர்யத்தைச் செய்து ஸ்ரீஜம்புநாதருடைய அனுக்கிரஹத்தை அடையவேண்டி தம்மை இந்த க்ஷேத்திரத்தில் வஸிக்கும்படி அனுக்கிரஹம்செய்த ஸ்ரீகும்பகோணம் ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்களுடைய சரணாரவிந்தங்களில் அநேககோடி வந்தனங்களை ஸமர்ப்பணம்செய்து பிறகு ஸகலஜனங்களும் உத்தமமான இந்த க்ஷேத்திரத்தில் விளங்கும் ஸ்ரீ ஜம்புநாதருடைய மஹிமையை நன்கறிந்து பகவானை திருஷ்டமான பக்தியுடன் ஆராதித்து அவருடைய கிருபைக்குப் பாத்திரர்களாக ஆகி ஸம்ஸார பந்தத்திலிருந்தும் விடுபட்டு உத்தமமான சிரேயஸ்ஸைப் பெற வேண்டுமெனக் கருதி இந்தக் காரியத்தில் தாம் சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதாயும், அது பயன்படுமாறு இங்குள்ள ஜனங்கள் யாவரும் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஸப்யர்களைப் பிரார்த்தித்து இதுவிஷயமாய் மற்றும் சில வார்த்தைகளைச் சொல்லி முடித்துக்கொண்டார்கள். அப்பால் இந்த ஊர் ஸ்ரீஜகத்குரு வித்யாஸ்தானத்தில் வேதாந்த உபாத்தியாயராயிருக்கும் பிர்மஸ்ரீ ராமசாஸ்திரியளவர்கள் பக்தி விஷயமாய் உபன்யஸித்தார்கள். அந்த ஸமயத்தில் இந்த க்ஷேத்திரத்தினுடைய மகிமையையும், தீர்த்தங்களுடைய வைபவத்தையும் ஸ்ரீஜம்புபதி அகிலாண்டேசுவரீ இவர்களுக்கிருக்கும் கருணையையும் அபாரமான அனுக்கிரஹ சக்தியையும் மற்றும் இந்த க்ஷேத்திர ஸம்பந்தமாய் புராணத்திலுள்ள ரகஸ்யமான பல விஷயங்களையும் தெளிவாய் எடுத்துக்கூறி ஸபையிலுள்ள ஜனங்களுக்கு அதிக ஆனந்தத்தையுண்டுபண்ணினார்கள்.

முடிவுரையில் லோகோபகாரமான இந்த காரியத்தைப் பூர்த்திசெய்து ஸகல ஜனங்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டு பண்ணின ஸ்ரீ ஜகத்குருமடம் ஆஸ்தானவித்வான் சாஸ்திரியளவர்

களுக்கு நாம் நன்றிபாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். இவர்கள் இனியும் இவ்விதமே லோகோபகாரமாயிருக்கும் இந்தமாதிரியான சிறந்தகாரியங்களில் தமது காலத்தைச் செலவிட்டு ஸகல ஜனங்களுக்கும் ஸ்ரீ பரமேசுவர பக்தியை விருத்தியாகும்படி செய்யவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்வதுடன் எதிரில் ஸபாநாயகியாய் விளங்கும் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்பாளும் அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று பிரார்த்தித்து முடித்துக் கொண்டார்கள். பிறகு இவ்வூரில் தற்காலம் வந்திருக்கும் வேதாந்த வித்யார்த்தியான பிர்மஸ்ரீ கும்பகோணம் சிவராமசாஸ்திரியவர்கள் ஸ்ரீ ஜம்புநாதருடைய மகிமையை நிரூபித்து ஸ்ரீ அம்பாளுக்கு இருக்கும் விசேஷமான சக்தியை ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யாளால் ஸௌந்தர்யலஹரியில் சொல்லப்பட்ட सुधामप्यास्वाद्य என்கிற சுலோகத்தைக்கூறி அதின்கருத்தை வெளியிட்டு நன்கு நிரூபித்தார்கள். இந்த க்ஷேத்திரத்திலிருக்கும் பிர்மஸ்ரீ நடேச சாஸ்திரியவர்கள், புராணமென்றால் சிலர் அநாதரவு செய்கிறார்கள். அது உசிதமில்லை. சுருதிஸ்மிருதிகளைப்போல் இவைகளையும் பிரமாணமாகவே கொள்ளவேண்டுமென்று தகுந்த காரணங்களுடன் எடுத்துக்காட்டி தற்காலம் நம புராணநூல்கள் இவ்விதம் வெளிவரவேண்டியது முக்யமென்பதையுமெடுத்துச் சொல்லி முடித்துக்கொண்டார்கள், பிறகு அக்ராஸனாதிபதியவர்கள் அரங்கேற்றுபடி என்கிற பதத்தினுடைய கருத்தையறிவித்து இந்த ஸபை அம்பாளுடைய ஸந்நிதியில் நடந்ததே உசிதமாகும். அம்பாளுடன் கூடவே ஈசுவரனும் இருக்கிறானென்றும் அப்பொழுதுதான் விசேஷ அனுக்கிரகசக்தி அவருக்குண்டென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றபடியால் ஸ்வாமி அம்பாள் இருவர்களுடைய அனுக்கிரகத்தையும் பெறுவதற்குத் தகுதியான இடம் இதுதான். இந்த க்ஷேத்திரத்தில் விளங்கும் பரமேசுவரருக்கு அமிருதேச்வரர் என்று புராணத்தில் கூறப்படுகின்றது. அதின் கருத்தாவது ஜலங்களுக்கு ஈசுவரன் என்பதே. இந்த க்ஷேத்திர மான்மியத்தை மொழிபெயர்த்த சாஸ்திரியவர்களின் பெயர் பஞ்சாபகேசர். (அதாவது ஐந்துநதிகளுக்கு ஈசுவரர் என்று பொருள்.) இதை கவனித்தால் இவ்விதம் மொழிபெயர்க்கக்கூடிய ஞானம் வேறு பண்டிதர்களுக்கிருப்பினும் ஜலேசுவரர் என்கிற பகவானுடைய பெயருக்குப் பூர்ணமான ஸாம்யமில்லாவிட்

டாலும், அற்பஜலத்திற்கு இவரும் ஈசுவரர் என்று இவருக்கு மிருப்பதால் மற்றவர்களுக்கில்லாத நாமஸாம்யம் இவர்களுக்கு அதிகமிருப்பதால் இதர பண்டிதர்களைக்காட்டிலும் இந்தகாரியத் தைச்செய்கிறதற்கு இவர்களே அதிக பாத்தியமுடையவர்கள். இவர்கள் செய்ததே சரிஎன்றும் பின்னும்பல விஷயங்களையும் கூறி இவ்விதம் நல்லகாரியங்களை விருத்திசெய்து லோக க்ஷேமத் தையுண்டுபண்ண வேண்டுமென்று ஸ்ரீ அம்பாளைப் பிரார்த்தித்துக் கொண்டுமுடித்துக்கொண்டார்கள். உடனேபிர்மஸ்ரீ ப. பஞ்சாப கேசசாஸ்திரியவர்களுக்கும் பிர்மஸ்ரீ அக்ராஸனபதியவர்களுக் கும் புஷ்பஹாரம்போட்டு ஸ்ரீ அகிலாண்டேசுவரியம்பாளுக்கு தீபாராதனை செய்து அம்பாளுடைய புஷ்பம் விபூதி குங்குமம் முதலான பிரஸாதங்களை ஸகல ஜனங்களுக்கும் விநியோகம் செய்து விமர்சையாய் ஸபை பூர்த்தியடைந்தது. சுபம்.

பி. ஆர். வைத்தீசுவரய்யர்.
ஸபா கார்யதர்சி.

திருவானைக்காவல்

க்ஷேத்திர மாஹாத்மியம்.

இப்புவியில் சிறந்த பல சிவ க்ஷேத்திரங்களிருப்பினும் அவைகளுக்குள் பூமி, ஜலம், வாயு, ஆகாசம், தேஜஸ் என்கிற இவ்வைந்து பூதங்களில் எந்தெந்த க்ஷேத்திரத்தில் ஆவிர்ப்பவித் திருக்கின்றனரோ அந்த ஐந்து க்ஷேத்திரங்களுக்கும் பாஞ்சபௌ திக க்ஷேத்திரங்களென்றும் அவைகள் மிகச் சிறந்தனவென்றும் பெரியோர்களின் கொள்கை. இச் சிறந்த க்ஷேத்திரங்களுக்குள் அப்லிங்க க்ஷேத்திரமென்று கூறப்படும் திருவானைக்காவல் க்ஷேத்திரமும் ஒன்றாகும். இதில் ஸ்ரீபராசக்தியான அகிலாண் டேசுவரியம்பாளால் இங்குள்ள புண்யதீர்த்தத்தைத்தன் கையால் எடுத்து லிங்காகாரமாகச்செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்ப தால் இதற்கு இந்தக் காரணப்பெயர் ஏற்பட்டிருக்கின்றது. உத்த மமான க்ஷேத்திரங்கள் புண்யதீர்த்தங்கள் ஈசுவர மூர்த்திகள்

இவைகளுக்கிருக்கும் அற்புத மகிமைகளை ஸகல ஜனங்களும் நன்கறிந்து ஆங்காங்கு அனுஷ்டிக்கவேண்டிய கர்மாக்களை விதிப்படி அனுஷ்டித்து மனத்திலுள்ள மலத்தை அறவே போக்கிப் பவப்பிணியை அகற்றும் திறமைவாய்ந்த ஆத்ம ஞானத்தைப் பெற்று ஸுகித்திருக்கவேண்டி கருணைக்கடலான ஸ்ரீவியாஸர் முதலிய மஹரிஷிகள் புராணங்களின் வாயிலாக அந்த மஹிமைகளை நன்கு வெளியிட்டிருக்கிறார்கள். அவ்விதமிருந்தும் நம் ஜனங்களுக்கிருக்கும் சிரத்தைக் குறைவால் அவைகளிற் சிலமாத்திரம் வெளியில் பிரகாசிக்கின்றனவேயன்றி பூராவும் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. அவ்விதம் கிடைத்தாலும் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் செய்யுளாகவும், சுலோகரூபமாகவும் கிடைக்கின்றனவேயன்றி எளிய தமிழ்நடையில் வசனரூபமாகக் கிடைக்கவில்லை. இவ்விதம் கிடைக்காமலிருக்கும் புராணங்களில் மிகச் சிறந்த இத் திருவானைக்காவல் க்ஷேத்திர மாஹாத்மியமும் ஒன்றாகும். இதனால் பல ஜனங்கள் இந்த க்ஷேத்திரங்களின் தீர்த்தம்.

ஸ்ரீ ஜம்புநாதர் ஸ்ரீ அகிலாண்டேசுவரியம்பாள் இவர்களுடைய புராணத்திலுள்ள பூரா மகிமையையும் அறியமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இவ்வித கஷ்டத்தை விலக்கவேண்டியும் தம் வாக்கையும் மனதையும் பரிசுத்தமாகச் செய்துகொள்ளவேண்டியும் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதிஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யஸ்வாமிகளவர்களுடைய ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வானும் மகோபதேச கவிரத்ன பிருதாங்கிதருமான ப. பஞ்சாபகேச சாஸ்திரியளவர்கள் பாத்மபுராணத்தில் 26-அத்தியாயங்களால் சொல்லப்பட்ட மாகாத்மியத்தை ஸகலஜனங்களும் வெகு சுலபமாயறிந்து கொள்ளும்படி எளிய தமிழ்நடையில் வசனரூபமாக மூலத்திலுள்ள அபிப்பிராயத்திற்கு அற்பங்கூட மாறுதலின்றிமொழிபெயர்த்து அவச்யமான 8-ப்படங்களுடனும் அச்சிட்டு 210-பக்கம்கொண்ட புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பகவத் பக்தர்களான எல்லா ஜனங்களும், அதை வாங்கிப்படித்து ஸ்ரீ ஜம்புநாதருடைய மகிமையை நன்குயறிந்து அவரிடம் திடமான பக்தியைச்செய்து அவரனுக்கிரகத்தைச் சீக்கிரம் பெறுவதுடன் லோகோபகாரார்த்தமாய் உத்தமமான இந்தச் சிவ கைங்கர்யத்திலேற்பட்ட ஷை சாஸ்திரியளவர்

களுடைய சிரமத்தையும் ஸபலமாகச் செய்யவேணுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். விலை. ரூ. 1—0—0

இப்புத்தகம் வேண்டியவர்கள்,

கும்பகோணம் கீழடபீர்த்தெரு 63நெ. வீடு
ப. பஞ்சாபகேசசாஸ்திரியளிடமும்,
திருவானைக்காவல் வடக்குவீதி
பி. ஆர். வைத்தீசுவரய்யரிடமும்,
ஷை ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்.
மடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ ஜம்புநாதபக்தன்.

முக்கிய கவனிப்பு.

சந்தா நேயர்களே!

நாளது வருஷத்திய உபாகர்ம ஸம்பந்தமாய்ப் பல ஊர்களிலிருந்து நமக்குக் கடிதம் வந்துகொண்டவண்ணமாகவே இருக்கின்றது. அவையெல்லாம் ஒன்றுக்கொன்று விருத்தங்களாக இருக்கின்றனவேயன்றி ஒற்றுமையாக ஒன்றாவது இல்லை. அவைகளெல்லாவற்றையும் பிரசுரப்படுத்துவதாயிருந்தால் நம் நாட்டினர் உபாகர்மவிஷயமாய் சண்டையிடுவதற்கு இப் பத்திரிகை ஒரு முகாந்தரமாய் முடியும். இதைப்பற்றி வருஷந்தோறும் சண்டையேற்பட்டவாறாகவே இருக்கின்றது. ஸமரஸ ஸித்தாந்தம் யாதொன்றுமிதுவரையில் ஏற்படவில்லை. மஹரிஷிகளின் வசனமோ பரமகம்பீரமாயுள்ளது. அம் மஹரிஷிகளுக்குள்ளும் அபிப்பிராயபேதம் பல விஷயங்களில் காணப்படுகின்றது.

இதனால்தான் ஸ்மிருதி நிபந்தனக்கிரந்தங்களுக்கும் ஸித்தாந்தம் ஸமரஸமாகச் சொல்லமுடியவில்லை. ஆகவே நாமெல்லோரும் **महाजनो येनगतस्सपंथा:** என்ற சாஸ்திரப்படி அங்கங்கே அனுஷ்டான சீலர்களும் வித்வான்களுமாக விளங்கிவரும் சிஷ்டர்களிடம் உபாகர்மத்துக்குறிய காலத்தையறிந்துகொண்டுத் தமது

குலாசாரப்பிரகாரமாக உபாகர்மாவைச் செய்வதுதான் நலம். இதன்றி இதற்காக வீண்வாதம் புரிவது நன்றன்று.

சிலர் பிரதமோபாகர்மாவிற்குத்தான் தோஷங்கனிக்கவேண்டுமென்றும், மற்றுஞ்சிலர் பிரதமம், த்விதீயம், எல்லா உபாகர்மாவிற்கும் தோஷம் கவனிக்கத்தக்கதென்றும், இன்னுஞ் சிலர் தோஷமுள்ளகாலத்திலும் பிரதமோபாகர்மாவையும் சாந்திபூர்வமாக அநுஷ்டித்துவிடலாமென்றும், வேறு சிலர் சாந்திபூர்வமாக பிரதமத்தை அனுஷ்டிப்பது மூன்றுகாலத்திற்குந் தோஷமேற்பட்டால்தானென்றும், வேறு சிலர் உபாகர்மத்திற்குத் தடையாகக் கருதப்படுந் தோஷங்களுக்குள் தாரதம்யம் உண்டென்றும் மற்றுஞ்சிலர் அப்படியில்லையென்றுமிவ்வாறு பிளவுபட்டுச் சிதைந்துள்ள உபாகர்ம காலத்தை வீண்வாதத்தால் தீர்மானம் செய்ய முடியாதாகையால் இனி இப்படிப்பட்ட விஷயங்களைப் பிரசுரப்படுத்துவதாக உத்தேசமில்லை. ஆகவே இத்தகைய விவாத விஷயங்களை விடுத்து நிர்விவாத ஸத்விஷயங்களைப் பிரசுரப்படுத்தும்படி எழுதியனுப்பக் கோருகிறேன்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ஜராஸந்தன்.

1. சண்டகௌசிகரது அருளால் பிறந்தவனிவன். இவன் தந்தை பிருஹத்ரதன். சண்டகௌசிகர் அரசனிடம் வந்தார். அவனும் இவரைத் தக்கபடி அர்ச்சித்தான். ஜராஸந்தனது குணத்தை அவர் கூறினர். இவன் மிக்க பலசாலி. போரில் எல்லோரையும் வெல்வான். அவனை எவரும் ஜயிக்கமாட்டார்.

2. பரமசிவ பக்தனிவன். அவரை இவன் தர்சிப்பான் என்றார். தந்தை இவனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். தான் தவம்செய்ய வநம் சென்றார். ஜராஸந்தன் எல்லா அரசர்களையும் ஜயித்தான். தன்னுடைய பெண்களை கம்ஸனுக்குக் கொடுத்தான்.

3. கம்ஸனைக் கிருஷ்ணன் கொன்றான். அதனால் அவன் கோபங்கொண்டான். கிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்தான். தொண்ணூற்றென்பதுமுறை கதையைச்சுற்றி எறிந்தான். அது தொண்ணூற்றென்பது யோஜனைதூரம்வந்து விழுந்தது. அந்த இடத்திற்குக் கதாவஸாநம் என்று பெயர்.

4. அவனை ஜயிக்க கிருஷ்ணன் பீமார்ஜுனர்களுடன் புறப்பட்டார். மூவரும் பிராமணவேஷம் பூண்டனர். மகத தேசம் வந்துசேர்ந்தனர். அங்கே மூன்று பேரிவாத்யங்களைக் கண்டனர். அதை மூவரும் உடைத்தனர். அந்த பேரி ஒருமுறை அடித்தால் ஒருமாதம் ஓயாமல் சப்திக்கும்.

5. அந்த தோல் ஒரு ராக்ஷஸனுடையது. அவன் காளை உருவங்கொண்டு வந்தான். அவனைப் பிருஹத்ரதன் கொன்றான். அவன் தோலால் இந்த பேரியைச் செய்தான். கிருஷ்ணன் நண்பர்களுடன் அரண்மனையில் நுழைந்தார். அரசன் அவர்களை நன்கு வரவேற்றான்.

6. யாது வேண்டும் என்று கேட்டான். பகவான் இரவில் கூறுவதாகச் சொன்னார். பிராமண பக்தியினால் அரசன் இரவில் எழுந்து அவர்களை வேண்டினான். பகவான் மூவரில் ஒருவருடன் யுத்தம் செய். இதே நாங்கள் விரும்பியது என்றார். ஜராஸந்தனுக்குக் கோபம் உதித்தது.

7. பலமுறை தனக்குப் பகவான் பயந்தோடியதைக் கூறினான். அவர் பீமனே உன்னைக் கொல்பவன் என்ற அசரீரியைக் கேட்டு அவனைக் கொல்லாமல் விட்டதாகச் சொன்னார். கிருஷ்ணன், நீ சிவனுக்குப் பலிகொடுப்பதற்காகவைத்திருக்கும் ராஜாக்களை விடு.

8. அல்லது போருக்குவா என்றார். ஜராஸந்தன் குழந்தை என்று அர்ஜுனனை விட்டான். இடையன் என்று கிருஷ்ணனையும் விட்டான். பருத்து கம்பீரமாக இருக்கும் பீமனைச் சண்டைக்கு அழைத்தான். இருவருக்கும் சண்டை நடந்தது. மிக பயங்கரமான யுத்தமது.

9. எவரும் ஜயிக்கவில்லை. எவரும் தோற்கவுமில்லை. பல நாள் போர்நடந்தது. கிருஷ்ணன் வாயுவை நினைத்துப் பீமனை யுத்தம் செய்யச்சொன்னார். அப்பொழுதும் ஜயம் உண்டாக வில்லை. பீமன் மனமுருக பகவானைப் பார்த்தான். அவர் ஓர் கோரையை இரண்டாகக்கிழித்தார்.

10. பீமன் ஜாடையறிந்தான். ஜராஸந்தனை இரண்டாகக் கிழித்தான். அவன் இறந்தான். அவன் பிள்ளை ஸஹதேவன். அவனுக்குப் பகவான் பட்டாபிஷேகம் செய்துவைத்தார். இரா ஜாக்களை விடுவித்தார். அவர்கள் பீமனையும் கிருஷ்ணனையும் போற்றினர். பரோபகாரமே சிறந்த தர்மம்.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

சென்னையின்பாக்யம் சாதுர்மாஸ்யம் முடிந்தவுடன் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்கள் சென்னைநகருக்கு விஜயம் செய்யப்போகிறார்களென்ற செய்தி சென்னைவாஸிகளை ஆனந்தத்தில் அமர்த்தும். 55-வருஷங்களுக்கு முன் ஸ்ரீமதாசார்யாள் இங்கு விஜயம் செய்ததாகத் தெரிகிறது. ஆவலுடன் ஸ்ரீஅவாளை எதிர்பார்க்கும் ஆஸ்திகர்கள் தக்கபடி நடந்துகொள்வாராக.

* * * * * * * *

தீர்த்ததானம் 5௨ பெங்களூரில் வீராஜேந்திரப்பேட்டையில் தண்ணீர் குழாய் வைப்பதற்காக 25 ஆயிரம் ரூபாய் நன்கொடை ஸ்ரீ பாபய்யா நாயுடுவரால் அளிக்கப்பட்டது. ஏற்கனவே இந்த தார்மிகர் ஓர் ஆலயத்திற்கு தன்சொந்தவீட்டை சாஸனம்செய்து வைத்தவர். தாகவிடாய் தீர்க்க அவசியம் ஒவ்வொருவரும் தீர்த்த தானம் செய்யவேணுமென்ற எண்ணத்துடனே எவர் வந்தாலும் அர்க்ய பாத்யங்களை அளிக்கும்படி நம் தர்ம நூல் கூறுகிறது.

அவர் வீட்டிலும் குழாய் வழியாக தீர்த்த தானம் செய்யும் இவரைக்கொண்டாடாதார் உண்டோ ?

*　*　*　*　*　*　*　*

அன்னதானம் 6ஃ கிருஷ்ணகிரியில் சுகாதாரவாரத்தில் ஓர் கனவான் 2000 ஏழைகளுக்கு அறுசுவை போஜனம் செய்து வைத்தார். எக்கருத்துக்கொண்டு இக்காலத்தில் அவர் செய்திருந்தாலும் அன்னதானம் செய்த அவரை வாழ்த்துவது நம் கடமையாகும்.

*　*　*　*　*　*　*　*

அபிநவகர்ணன். ஸ்ரீமான் மங்னிராம்ஸேட் என்ற தர்மசீலர் தென்னாட்டில் யாத்திரைசெய்கிறார். இவர் வைஷ்ணவர். கல்கத்தா நகரவாஸி. கோடீச்வரர். 60000ரூ. செலவில் காஞ்சிவரதனுக்கும் 15லக்ஷம் செலவில் புஷ்கரத்தில் ராமவைகுண்ட மந்திரத்திற்கும், 40000 செலவில் மதுரையில் ஓர் ஸத்ரத்திற்கும் கைங்கரியம் செய்திருக்கிறார். அஹோபிலமடம் வீராகவாலயத்திற்கு 40000 திருப்பணிசெய்தார். கும்பகோணம் சாரங்கபாணிஸ்வாமி த்வஜஸ்தம்பத்திற்கு 5000, அம்பிகாலயத்திற்கு 5000, ஆகனூர் ஆலயத்திற்கு 3000, தங்கக்குடைசெய்ய 1000 கொடுத்திருக்கிறார். இது போக சிதம்பரத்தில் ஓர் ஸத்ரங்கட்டவும் யோசித்திருக்கிறார். இவரது சிறந்த தானத்தைக் கொண்டாடாதவருண்டோ? தர்மதேவரிவரை ரக்ஷிப்பர்.

*　*　*　*　*　*　*　*

காலத்திற்கேற்ற கூற்று. 5ஃ நிஜாம் ராஜ்யத்திலுள்ள ஔரங்கபாத் என்ற ஊரில் ஓர் கிராமதேவதை ஐப்பசியிலல்லாது புரட்டாசியிலேயே தீபாவளியை செய்துவிடவேண்டு கூறுகிறதாம். அதேபோல் எல்லாஜனங்களும் அநுஷ்டிக்கிறார்களாம். இங்ஙனம் தேவதைவந்து கூறியதுதான் உண்மையோ அல்லது ஏன்தான் இப்படி தேவதை சொல்லவேண்டுமோ நாமறியோம். காலத்தின் கூற்றை என்னென்பது?

*　*　*　*　*　*　*　*

ஸதாசாரப்ரசாரம் 1ஃ முதல் ஸ்ரீமான் மாந்தை சா. கிருஷ்ணய்யரவர்கள் ஓர் தமிழ் தினசரிப் பத்திரிகையில் "இல்லொழுக்

கம்" என்ற தலைப்பின் கீழ் நமது ஸதாசாரத்தை விஸ்தாரமாக எழுதிவருகிறார். அவர் ஆசார்யபக்தி உள்ளவர். ஆஸ்திகர் எப்படியோ ஏனையவிஷயங்களை எழுதிவந்து இடையேஸதாசாரத்தையும் அவர் புகவிட்டது நன்று. பண்டைய ஆசாரங்களை வெறுக்கும் காலத்தில் ஓர் தேசீய பத்திரிகை இதற்கிடமளித்தது அல்லது இடமளிக்கும்படி செய்தது ஆச்சர்யமே. அக்கட்டுரைகளை ஆஸ்திகர் ஊன்றிப் படிப்பதுடன் அநுஷ்டானத்திற்கும் கொண்டுவருவாராகில் மிகமிக நலம்.

* * * * * * * *

தர்மப்ரசாரம் 12உ. கவிரத்னம் மஹோபதேசக ஸ்ரீமான் பஞ்சாபகேசசாஸ்திரிகள்எழுதிய ஜம்புகேச்வர க்ஷேத்ரமஹிமைக்கும் பத்திரிகையில் மதிப்புரை வந்தது. தமிழ் படிக்கும் ஆண் பெண்பாலருக்கு ஸம்ஸ்கிருதத்திலுள்ள அரிய விஷயங்களைத் தமிழ் படித்துக்கொடுத்தால் அதனாலவர்கள் தர்மத்தை அறிந்து யதாசக்தி அநுஷ்டிக்க இயலும் புத்தகமும் பத்திரிகையும் பெருத்த இந்நாளில் அதன் மூலமாகவே ப்ரசாரம் செய்வது தான் பொருத்தமானது. பண்டிதாவரும் பத்திரிகாசிரியர் கூறியவண்ணம் ஆங்காங்கு மதப்ரசாரம் செய்வதுடன் இது போன்ற வேலைகளில் ஊக்கம் காட்டல் நலம்.

* * * * * * * *

முயற்சி கைகூடுக. 5உ திவாரூரில் ஆஸ்திகர் ஒன்றுகூடி ஓர் தர்மகார்யத்தைப்பற்றி சிந்தித்தனர். ஆங்குள்ள காமாக்ஷி அம்மன் கோவிலில் நடைபெற்றுவந்த பூஜை திடீரென்று நின்றுவிட்டது. அதற்குப் போதிய தநமிருந்தும் பூஜை நடவாததால் ஆஸ்திகர் நீதிஸ்தலத்தின் மூலமாகவும் தேவாலய விஷய ஸபை மூலமாகவும் பரிஹாரந்தேட முயற்சிக்கின்றனர். இங்ஙனம் ஆஸ்திகர் ஆங்காங்கு கவனித்துவந்தால் கோவில் நிர்வாஹம் நன்றாக நடைபெறும். இவ்வூர் மஹாஜநங்களைப் போற்றுகிறோம்.

வே. ஸோமதேவசர்மா.